**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண்.210/2024 வா.சா.1 வெள்ளிங்கிரி

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 26.02.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் வில்லங்கம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதால் அதனை நீக்க வழக்கு தாக்கல் செய்து உள்ளேன். வில்லங்க சான்று என்பது உரிமைமூல ஆவணம் அல்ல என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு பிரச்சனை தொடர்பாக நான் பிரதிவாதிகளிடம் மனு ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு மனு ஏதும் கொடுக்காமல் கொடுத்தாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2) இவ்வழக்கு பரிகாரத்தை தீர்மானிக்க இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லை என்றால் சரியல்ல. வில்லங்க சான்று என்பது பதிவு துறையால் வழங்கப்படும் ஒரு சேவை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வில்லங்க சான்று என்பது பதிவு துறையால் வழங்கப்படும் ஒரு சேவை என்பதால் என் சொத்து உரிமை ஏதும் பாதிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வில்லங்கம் குறிப்பிடப்பட்டுள்ளதால் என்னால் அடமானமோ, பாராதீனமோ செய்ய இயலவில்லை. மேற்படி பிரச்சனை என் தனிப்பட்ட பிரச்சனை என்பதால் அதற்கு பதிவு துறை பொறுப்பாகாது என்றால் சரியல்ல. இவ்வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல

இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**ஒப்பம் /-(மு.ச.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி